Toronto District School Board

டிசம்பர் 21, 2020

அன்பான பெற்றோரே/பாதுகாவலர்களே மற்றும் மாணவர்களே,

COVID-19 பரவலை மேலும் குறைப்பதற்காக, ஒன்ராறியோ மாகாணம் சாம்பல் (அடங்கல்/முடக்கல்) நிலைக்கு (Grey/Lockdown) Zone) டிசம்பர் 26 சனிக்கிழமை அன்று செல்கிறதென ஒன்ராறியோ அரசு இன்று அறிவித்துள்ளது. ரொறன்ரோவிலும், தெற்கு ஒன்ராறியோவின் ஏனைய பகுதிகளிலும் இந்த அடங்கல்/முடக்கல் நிலை 28 நாட்களுக்குத் தொடர்ந்திருக்கும். இந்த அறிவித்தலின் ஒரு பகுதியாக, **TDSB பாடசாலைகள் உள்ளடங்கலாக, தெற்கு ஒன்ராறியோவிலுள்ள ஆரம்பப் பாடசாலைகள் அனைத்தும் மாணவர்களுக்கு ஜனவரி 11 திங்கள்வரை மூடப்பட்டிருக்கும் என்றும், இரண்டாம்தரப் பாடசாலைகள் அனைத்தும் மாணவர்களுக்கு ஜனவரி 25 திங்கள்வரை மூடப்பட்டிருக்கும் என்றும் அரசாங்கம் கூறியுள்ளது**. இந்த நேரத்தில் மெய்நிகர் பாடசாலைகள் யாவும் வழமைபோல இயங்கும் அதேவேளையில் நேரில் கற்கும் பாடசாலைகள் யாவும் தொலைநிலைக் கற்றல் பாடசாலைகளாக மாற்றப்படும்.

TDSB பாடசாலைகளில் தொலைநிலைக் கற்றல் தொடர்பான இந்த மாற்றம் குறித்த மேலதிக தகவல்களைத் தயவுசெய்து கீழே கண்டறியுங்கள்.

## ஆரம்பப் பாடசாலைகள்

**நேரில் கற்கும் பாடசாலைகள்:** தொலைநிலைக் கற்றலை அவர்களின் வழக்கமான பாடசாலை ஆசிரியரிடமிருந்து மாணவர்கள் அவர்களின் வீட்டிலிருந்தபடி பெற்றுக்கொள்வார்கள். அவர்களின் வழக்கமான பாடசாலை அட்டவணை/நேரசூசிகையை ஆரம்பப் பாடசாலைகள் பின்பற்றும். சில சந்தர்ப்பங்களில் சிறிய மாற்றங்களைச் செய்யவேண்டியிருக்கலாம், ஜனவரி 4 திங்கள் அன்று அந்த மாற்றங்கள் குடும்பத்தவர்களுக்குத் தெரிவிக்கப்படும்

**மெய்நிகர் பாடசாலைகள்:** தொடர்ந்தும் வழமைபோல இயங்கும்.

## இரண்டாம் தரப் பாடசாலைகள்

**நேரில் கற்கும் பாடசாலைகள்:** இரண்டாம்தரப் பாடசாலைகள் மாற்றப்பட்ட நேரசூசிகை ஒன்றைப் பின்பற்றும்:

| நேரம் | நாள் 1 | நாள் 2 | நாள் 3 | நாள் 4 |
|---|---|---|---|---|
| மு.ப. 8:45 – மு.ப. 10:00 | பாடநெறி 1<br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | பாடநெறி 1<br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | பாடநெறி 2<br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | பாடநெறி 2<br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) |

| | | | | |
|---|---|---|---|---|
| மு.ப. 10:00 –<br>மு.ப. 10:30 | <u>பாடநெறி 1</u><br><br>Asynchronous/<br><br>Independent Learning (ஏககாலத்தில் நிகழாத கற்றல்/<br><br>சுய கற்றல்) | <u>பாடநெறி 1</u><br><br>Asynchronous/<br><br>Independent Learning (ஏககாலத்தில் நிகழாத கற்றல்/<br><br>சுய கற்றல்) | <u>பாடநெறி 2</u><br><br>Asynchronous/<br><br>Independent Learning (ஏககாலத்தில் நிகழாத கற்றல்/<br><br>சுய கற்றல்) | <u>பாடநெறி 2</u><br><br>Asynchronous/<br><br>Independent Learning (ஏககாலத்தில் நிகழாத கற்றல்/<br><br>சுய கற்றல்) |
| மு.ப. 10:30 –<br>மு.ப. 11:45 | <u>பாடநெறி 1</u><br><br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்} | <u>பாடநெறி 1</u><br><br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | <u>பாடநெறி 2</u><br><br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | <u>பாடநெறி 2</u><br><br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) |
| மு.ப.11:45 –<br>பி.ப. 12:30 | <u>பாடநெறி 1</u><br><br>Asynchronous/<br><br>Independent Learning (ஏககாலத்தில் நிகழாத கற்றல்/<br><br>சுய கற்றல்) | <u>பாடநெறி 1</u><br><br>Asynchronous/<br><br>Independent Learning (ஏககாலத்தில் நிகழாத கற்றல்/<br><br>சுய கற்றல்) | <u>பாடநெறி 2</u><br><br>Asynchronous/<br><br>Independent Learning (ஏககாலத்தில் நிகழாத கற்றல்/<br><br>சுய கற்றல்) | <u>பாடநெறி 2</u><br><br>Asynchronous/<br><br>Independent Learning (ஏககாலத்தில் நிகழாத கற்றல்/<br><br>சுய கற்றல்) |
| பி.ப. 12:30 –<br>பி.ப. 1:10 | மதிய உணவு நேரம் | | | |
| பி.ப. 1:10 –<br>பி.ப. 2:00 | APA/PMA (ஆசிரியர்களால் தீர்மானிக்கப்படும் ஒப்படைகள்/செயல்பாடுகள்) | | | |
| பி.ப. 2:00 –<br>பி.ப. 3:15 | <u>பாடநெறி 2</u><br><br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | <u>பாடநெறி 2</u><br><br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | <u>பாடநெறி 1</u><br><br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | <u>பாடநெறி 1</u><br><br>Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) |

*குறிப்பு: காலை 8:45 மணி முதல் மதியம் 12:30 மணிவரை பாடநேரம் 1 தொடரும், அத்துடன் 150 நிமிட ஏககாலத்தில் நிகழும் கற்றல்/இணையக் கற்றலையும் 75 நிமிட ஏககாலத்தில் நிகழாத கற்றல்/சுய கற்றலையும் அது உள்ளடக்கும். காலை 8:45 மணிக்கு ஏககாலத்தில் நிகழும் இணைய மூலமான கற்பித்தலை ஆசிரியர்கள் ஆரம்பிப்பார்கள். மேலுள்ள நேரசூசிகையில் காட்டப்பட்டுள்ள ஏககாலத்தில் நிகழாத கற்றலுக்கான நேரங்கள் அவற்றை எவ்வாறு அட்டவணைப்படுத்தலாம் என்பதற்கான ஓர் உதாரணமாகும். ஏககாலத்தில் நிகழும் மற்றும் ஏககாலத்தில் நிகழாத கற்றலுக்கான நேரங்களை எவ்வாறு அட்டவணைப்படுத்துவது என்பது பற்றி அவர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்களே தீர்மானிப்பார்கள்.*

**மெய்நிகர் பாடசாலைகள்:** தொடர்ந்தும் வழமைபோல இயங்கும்.

## EdVance (துரிதப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்கள்) மற்றும் வளர்ந்தோர்களுக்கான பகல்நேரப் பாடசாலைகள்

**நேரில் கற்கும் பாடசாலைகள்:** வளர்ந்தோருக்கான பகல்நேரப் பாடசாலைகள் மற்றும் EdVance திட்டங்களில் உள்ள மாணவர்கள் பின்வரும் இணையக் கற்கை அட்டவணையைப் பின்பற்றுவார்கள்:

| | நாள் 1 | நாள் 2 | நாள் 3 | நாள் 4 |
|---|---|---|---|---|
| பாடநேரம் 1: 3 மணித்தியாலம் | 1AB (குழுக்கள்) Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | 1AB Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | 2AB Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | 2AB Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) |
| பாடநேரம் 2: 1 மணித்தியாலம் | 2AB Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | 2AB Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | 1AB Synchronous (1AB ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | 1AB Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) |
| பாடநேரம் 3: 2 மணித்தியாலம் | 3AB Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | 3AB Synchronous (3AB ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | 3AB Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) | 3AB Synchronous (ஏககாலத்தில் நிகழும் கற்றல்) |

பாடசாலைகள் யாவற்றிலும் ஆரம்ப நேரம் மற்றும் மதிய உணவு நேரம் என்பன தொடர்ந்தும் அதேபோல இருக்கும்.

**மெய்நிகர் வழியில் கற்றல்:** தொடர்ந்தும் வழமைபோல இருக்கும்.

**<u>Alternative Schools/Programs (மாற்றுவழிக் கற்றலுக்கான பாடசாலைகள்/திட்டங்கள்)</u>**

**நேரில் கற்கும் பாடசாலைகள்:** பாடசாலைச் சபைகள் உருவாக்கிய மாற்றியமைக்கப்பட்ட நேரசூசிகையைப் பயன்படுத்தாத பாடசாலைகள் (மாற்றுவழியில் கற்பிக்கும் பாடசாலைகள்-திட்டங்கள், விசேட கற்றல் தேவைகளுக்காக ஒருங்கிணைப்பட்ட வகுப்புகள், தீவிர ஆதரவு வழங்கப்படும் திட்டங்கள் (ISP) போன்றவை) அந்தந்தப் பாடசாலைகளில் உருவாக்கப்பட்ட தொலைநிலைக் கற்றல் அட்டவணைகளைச் செயல்படுத்தும்

**மெய்நிகர் வழியில் கற்றல்:** தொடர்ந்தும் வழமைபோல இருக்கும்.

**<u>விசேட கற்றல் தேவையுள்ளவர்களுக்காக ஒருங்கிணைக்கப்பட்ட வகுப்புகள்</u>**

ஒருங்கிணைக்கப்பட்ட வகுப்புகள் (கீழே பட்டியலிடப்பட்டுள்ளன) அந்தந்தப் பாடசாலைகளில் உருவாக்கப்பட்ட தொலைநிலைக் கற்றல் அட்டவணைகளைச் செயல்படுத்தும்.

**ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட வகுப்புகள்:** Beverly School, Lucy McCormick Senior School, Seneca School, Sunny View Jr. & Sr. PS, Parklane PS, William J. McCordic School

**இரண்டாம்தரப் பாடசாலைகளிலுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட வகுப்புகள்:** Central Etobicoke, Drewry Secondary School, Frank Oke, Maplewood High School, Sir William Osler, York Humber HS

மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக, தொலைதூரக் கற்றல் மூலம் கற்கமுடியாத விசேட கற்றல் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு, சாத்தியமானபோது மாணவர்களின் தேவைகளின் அடிப்படையில், நேரில் கற்பதற்கான ஆதரவுகளைப் பாடசாலைச் சபைகள் வழங்கும் என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள். இது தேவைப்படலாம் என நீங்கள் நினைத்தால் உங்களின் பிள்ளையின் அதிபருடன் தயவுசெய்து கதையுங்கள்.

**<u>பிள்ளைப் பராமரிப்பு (Child Care)/ விரிவுபடுத்தப்பட்ட பகல்நேர நிகழ்ச்சித்திட்டங்கள் (Extended Day Programs)</u>**

TDSB பாடசாலைகளுக்குள் அமைந்திருக்கும், சிறிய பிள்ளைகள் (toddler) மற்றும் பாடசாலைக்குச் செல்லும் வயதுக்குக் குறைவான பிள்ளைகளுக்குச் சேவைசெய்யும் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள் யாவும் முடக்க காலத்தின்போது திறந்திருப்பதற்கு அனுமதிக்கப்படும், இருப்பினும் பெற்றோர்/பாதுகாவலர்கள் அவர்களின் பிள்ளைப் பராமரிப்பு நிலையத்தினருடன் அந்த விபரங்களை உறுதிப்படுத்துதல் அவசியமாகும். பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் போது, TDSBஇன் விரிவுபடுத்தப்பட்ட பகல்நேர நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடசாலைக்கு முன்பான – மற்றும் பின்பான நிகழ்ச்சித்திட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டிருக்கும்.

Toronto District School Board

**<u>அடுத்தகட்டப் படிமுறைகள்</u>**

இந்த வருடம் 70,000 க்கும் அதிகமான சாதனங்களை மாணவர்களுக்கு TDSB விநியோகித்திருந்தாலும்கூட, சில மாணவர்களுக்கு இந்தத் தொலைநிலைக் கற்றல் காலத்தின்போது ஒரு சாதனம் தேவைப்படலாம் என்பது எங்களுக்குத் தெரியும். பாடசாலைகள் மீளத்திறக்கப்படும்போது, அவர்களின் பாடசாலையைத் தொடர்புகொள்ளும்படி அப்படியான தேவையுள்ள குடும்பத்தவர்கள், ஊக்குவிக்கப்படுகின்றார்கள். கிடைப்பதன் அடிப்படையில் சாதனங்கள் வழங்கப்படும் என்பதையும், அவற்றை விநியோகிக்கிப்பதற்கு நேரமெடுக்கலாம் என்பதையும் தயவுசெய்து விளங்கிக்கொள்ளுங்கள்.

பாடசாலைகள் யாவும் குளிர்கால விடுமுறையில் இருக்கும் இந்த நேரத்தில் இன்றைய செய்தி வந்திருப்பதால், இந்தச் செய்தி குழப்பத்தை ஏற்படுத்தும், உங்களில் பலருக்கு அடுத்தகட்டப் படிமுறைகள் தொடர்பான கேள்விகள் எழலாம் என்பதை நான் அறிவேன். ஜனவரி 4 திங்கள் அன்று, நேரில் கற்கும் பாடசாலைகள் தொடர்பான மேலதிகத் தகவல்களை வழங்குவதற்காக மாணவர்கள் மற்றும் குடும்பத்தவர்களை ஆசிரியர்கள் தொடர்புகொள்வதுடன், ஒப்பீட்டளவில் விரைவானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படும் தொலைதூரக் கற்றலுக்கு மாணவர்களை இடமாற்றும் செயல்முறையையும் ஆரம்பிப்பார்கள். மெய்நிகர் பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கான கற்பித்தல் ஜனவரி 4 திங்கள் அன்று வழமைபோலத் தொடரும்.

எதிர்பாராத செய்தியாக இது இருப்பதால், பலருக்கு இந்தச் செய்தி சிரமத்தைக் கொடுக்கலாம் என்பதை நான் அறிவேன். கடந்த 9 மாதங்களில் தொலைதூரக் கற்றல் பற்றி நாங்கள் நிறையவே கற்றிருக்கிறோம், இனியும் சவால்கள் இருக்கக்கூடும் எனினும், முடிந்தவரை சுமூகமான ஒரு இடமாற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக எங்களின் மாணவர்களுக்கும் குடும்பத்தவர்களுக்கும் நாங்கள் ஆதரவளிப்போம் என்பதை உங்களுக்கு உறுதிப்படுத்த நான் விரும்புகிறேன்.

உண்மையுள்ள,

K. Witherow

Kathy Witherow

Interim Director of Education (இடைக்காலக் கல்வி அதிகாரி)